2007 மார்ச் 30]

(ஆ) கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்ட மீனவர்கள். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் மிகுந்த பரபரப்போடும், ஆவலோடும், எழுப்பியிருக்கின்ற இந்தப் பிரச்சினை, எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்துள்ள ஒரு பிரச்சினை. அவர்கள் எழுப்புகின்ற இந்தப் பிரச்சினை குமரிமுனையிலே நடைபெறுகின்ற கொலைகள், சிங்கள இராணுவத்தால் நடத்தப்படுகின்ற வன்முறைச் சம்பவங்களைப் பற்றியதாகும். இதுகுறித்து உடனடியாக, விவரங்களை அறிந்துவர அந்த வட்டாரத்திலே உள்ள நம்முடைய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களை இன்று காலையிலே அனுப்பி வைத்திருக்கின்றேன். அங்கிருந்து அவர்கள் செய்திகளைச் சேகரித்துத் தருவார்கள். இதுகுறித்து நான் மத்திய சர்க்காரோடும் தொடர்பு கொண்டிருக்கின்றேன். விவரங்கள் வந்தபிறகு, இன்றைக்கே இந்த விவரங்கள் வந்தாலும்கூட, இடையிலே இந்த அவையிலே சொல்கின்றேன். இல்லாவிட்டால், நாளை அல்லது நாளை மறுநாள் இந்த அவையிலே இதைப் பற்றி விவாதிக்கலாம் என்று நம்புகின்றேன். (குறுக்கீடுகள்)

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்— தொடர்ச்சி

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, 27 சதவிகித இட ஒதுக்கீடு சம்பந்தமாக முதல்வர் அவர்கள். . .

திரு. வை. சிவபுண்ணியம்: பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள் சார்.

3. வரவு–செலவுத் திட்டம், 2007–2008, பொது விவாதமும் பதிலுரையும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2007-2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதமும் பதிலுரையும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.